

# ஆக்கிரமிப்பின் கால் தடம்

எல். வஸிம் அக்ரம்

# ஆக்கிரமிப்பின் கால் தடம்

எல். வஸீம் அக்ரம்

ஆக்கிரமிப்பின் கால் தடம்

© எல். வஸீம் அக்ரம்

Aakkiramippin kaalththadam - pocms

© L. Waseem Akram

படிகள் பதிப்பகம் - 01

| | | |
|---|---|---|
| First Edition | - | August 2009 |
| Layout | - | Ibnu Aysha |
| Cover | - | Azar |
| Published by | - | Padihal Publication<br>519/G 16, Jayanthi Mawatha,<br>Anuradhapura # 50000<br>padihal@yahoo.com<br>www.padikal.blogspot.com<br>071 3485060 |
| Publication | - | Tamil Sangam,<br>South Eastern University |
| Printing at | - | Easy PRINT,. Str : 0772633311 |
| Price | - | 110.00/ 1$ |
| ISBN | - | 978-955-50697-1-7 |

அநு.வை. நாகராஜன்,

அன்பு ஜவஹர்ஷா மற்றும்

பெற்றோர்களுக்கு

எல். வஸீம் அக்ரம்

# ஆக்கிரமிப்பின் கால் தடம்

எல். வஸீம் அக்ரம் அவர்கள் சிங்கள பௌத்த கலை கலாசார நுட்பங்களுக்குப் பேர்போன அநுராதபுரத்தினைப் பிறப்பிடமாக கொண்டவர். அநுராதபுரத்தினைக் களமாக கொண்டு வெளிவரும் படிகள் சஞ்சிகையின் ஆசிரியராகக் கடந்த ஆறு ஆண்டுகளாக செயற்பட்டு, இற்றைவரை 22 இதழ்களை வெளியிட்டுள்ளார்.

2005ஆம் ஆண்டு தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் அறபு மொழிபீட மாணவராக இணைந்ததிலிருந்து தென்கிழக்குப் பல்கலைக்கழக கவிதைப் பாரம்பரியத்திற்கு வித்தியாசமான ஒரு முகத்தைக் கொடுத்தார்.

பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவந்த நிஷ்டை, மரங்கொத்தி, எழுதுகோல், வெள்ளிச்சிறகு மற்றும் களவெட்டி போன்ற சஞ்சிகைகளின் ஆசிரியர்களில் ஒருவராக இருந்துள்ளார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்துடன் கடந்த மூன்று ஆண்டுகளாக இணைந்து பல்வேறு கலை இலக்கிய முயற்சிகளில் பெரிதும் அர்ப்பணிப்போடு ஈடுபட்டுள்ளார். இவரது மண்ணில் துழாவும் மனது (முதலாவது கவிதைத்) தொகுதி தமிழ்ச் சங்க வெளியீடாக வெளிவந்தது.

மிகக் குறுகிய காலத்தில் இலக்கிய செயற்பாட்டாளராகத் தன்னை அர்ப்பணித்து வளர்ந்து வரும் இவர், இலங்கையில் இருந்து வெளிவரும் பல்வேறு இலக்கிய இதழ்களில் ஆக்கங்களைப் படைத்து வருகிறார். 24வயது எல்லைக்குள் சுமார் 30 வெளியீட்டுப் பிரதிகளுக்கு கர்த்தவாக இருக்கும் இவரை சாதனையாளராகவும் பார்க்க முடியும்.

**எம்.எஸ்.எம். அஸாறுதீன்**

தலைவர், தமிழ்ச் சங்கம்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

# தன்னுணர்வுத் தன்மையான கவிதைகள்

வஸீம் அக்ரமின் கவிதைகள் தன்னுணர்வுத் தன்மை யுடயனவாக அமைகின்றன. எதனையோ தொலைத்து விட்டு ஏங்கித் திரியும் பிள்ளையைப் போல கவிஞனைக் காணவேண்டியுள்ளது. இக்கவிதைகளிளே கவிஞனுடைய எண்ணங்களை படமாக்கும் படிமங்கள் பல இடங்களிலே சிறப்பாக அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக 'எச்சக்கோடு வரைதல்' எனும் கவிதையில் மௌனம் பூசப்பட்ட அல்லது நிரப்பப்பட்ட வெள்ளைத் தாளிலே தனக்கும் தனது காதலிக்குமான ஓவியப் பாதை வரையப் பட்டுள்ளதாக கூறும் கவிஞன், அந்த வெள்ளைத்தாளிலே,

'நீயும் நானும்
உணர முடியாமல்
வெற்றுப் பக்கங்களில்
நிறம் மாறிக்கிடக்கிறோம்'...

என்று கூறுவதைப் பார்க்கலாம். எங்கள் கண்களுக்குத் தெரியாமல் எத்தனையோ பொருட்கள், காட்சிகள் இந்த பிரபஞ்சத்தில் இருக்கின்றன. அவை எங்களுக்குத் தெரியாதபடியால் அவை இல்லை என நாம் கூறமுடியாது. அது போல வெற்றுப் பக்கங்களில் நிறமாறிக்கிடப்பன அக்ரமும் காதலியும் இல்லை என நாம் கூற முடியாதல்லவா? இப்படி பல எண்ணங்களையெல்லாம் எனக்கு இக்கவிதை அடிகள் தோற்றுவிக்கின்றன. உங்களுக்கு இன்னும் பல தோற்றலாம்.

நடந்து வந்து, இப்பொழுது ஓய்ந்து போன போர்க் காலச்சூழல் கவிஞனை நன்றாக பாதித்துள்ளது. அச்சூழலின் நிலைப் பாடுகளையும் அக்ரம் தன்னுடைய கவிதைகளிலே தெளிவாகப் புலப் படுத்துகிறான். பயம், கோபம், தாழ்வு நிலை, துணிவு என்னும் உணர்வுகள் அவன் கவிதைகளிலே மாறி மாறி இழையோடுகின்றன. சில வேலைகளிலே உணர்வுகள் பீறிக் கொண்டோடுகின்றன.

வளர்ந்து வரும் இளங்விஞன் அக்ரம் இன்னும் பல உயர்ந்த கவிதைகளை இயற்றிப் புகழ்பெற வேண்டுமென இறையாசிகளை வேண்டுகிறேன். அவனுக்கு என்னுடைய பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் கூறி, இச்சிறு அணிந்துரையை நிறைவு செய்கிறேன்.

**பேராசிரியர் அ. சன்முகதாஸ்,** Ph.D (Edinburgh)
தகைசார் வாழ்நாட் பேராசிரியர் (யாழ். பல்கலைக் கழகம்)
நிபுணத்துவ ஆலோசகர் / மொழித்துறை
தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

# கவித்துவத்தின் கால் தடம்

i

மனித நாகரீகத்தின் முக்கிய பரிணாமமாக அவன் பேசக் கற்றுக் கொண்டதை நாம் ஏற்றுக் கொண்டால், அதன் மற்றுமொரு குறிப்பிடத்தக்க அடைவு நிலையாக அவன் கவிதை எழுதக் கற்றுக் கொண்டதை ஏற்றுக் கொள்ள வேண்டி வரும். கவிதை என்பது ஒரு கலைப் படைப்பாகும். கலைப் படைப்பானது முற்றிலும் அழகியல் சார்ந்ததாகும். கவிதை என்ற கலைப் படைப்பு அழகியலினதும் மொழியினதும் இரண்டறக்கலப்பின்போது புஷ்பிக்கப்படுவதாகும். மொழி சார்ந்த கலைப் படைப்புகளில் மிகப் பிரதானமான வடிவமாக காணப்படுவதும் கவிதையேயாகும்.

கவிதைத்துறையில் ஏனைய துறைகளைவிடவும் ஈழத்து மண்ணானது பல்வகையிலும் செழுமைப்பட்டு நிற்பது நாம் ஏற்றுக் கொள்ள வேண்டிய ஓர் உண்மையாகும். அதற்கு பல்வேறு வகையான பின்புலங்களை நாம் காரணமாக கூறிக் கொண்டாலும் அழகியலும் கவித்துவமும் இங்கு காலூண்றி வேரோடி இருக்கின்றது என்பதே உண்மையாகும்.

ஈழத்து கவிதை வரலாற்றில் வடக்கும், கிழக்கும், மலையகமும் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் இலக்கியம் தீவிரமாகப் பேசப்படுவது திக்வல்லை மற்றும் அநுராதபுரப் பிரதேசங் களிலேயாகும். முந்தைய நாட்களில் நள்ளிரவு வேளைகளில் காட்டுப் பகுதி ஊடான நெடுஞ்சாலைகளில் பேரூந்து வண்டியினூடாக பிரயாணம் செய்யும்போது, அந்த கும்மிருட்டின் நடுவில் தேனீர்க் கடையொன்றில் TM சௌந்தரராஜனோ அல்லது EM ஹனிபாவோ மூச்சுத்திணர தமிழ் பாடல் ஒன்றைப் பாடிக்கொண்டிருப்பதை கேட்கும்போது ஏற்படும் மகிழ்ச்சியைப்போன்று நவீனத்துவ மற்றும் பின் நவீனத்துவ பிரக்ஞையுடன் தீவிர இலக்கியப் படைப்புகள் இப்பிரதேசத்திலிருந்து பிரவாகிப்பது நமக்கு மகிழ்ச்சி அலைபாய்கின்றது.

அநுராதபுரப் பிராந்தியத்தில் தமிழ்க் கவிதை உலகின் ஆகப்பிந்திய வடிவங்கள் பரிசோதனை உலைகளுக்குள்ளே தீவிரமாக சர்ச்சிக்கப்படுவதற்கு வஸீம் அக்ரம் என்ற இளம் கவிஞர் ஒரு முக்கியமான காரணமாகக் கருதப்படுகிறார். அவர் படைத்துள்ள ஆக்கிரமிப்பின் கால் தடம் எனும் புத்தம் பதிய கவிதைத் தொகுதி அதற்கு ஒரு முக்கியமான காரணமாக எதிர்காலத்தில் பேசப்படப் போகின்றது. மண்ணில் துழாவும் மனது என்ற இவரின் முதலாவது தொகுதி 2008ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சூடு ஆறுவதற்கு முன்னரே தனது இரண்டாவது தொகுதியையும் மிகக் கனதியான இலக்கியத்தரத்துடன் கவிதை உலகத்திட்கு சமர்ப்பித்துள்ளார்.

ii

இறுக்கமும் அழகியல் முலாமும் மொழிப்புலமை முதிர்ச்சியும் ஆக்கத் துறைசார்ந்த தீவிரமான அக்கறையும் ஒருங்கே கவனம் செலுத்தப்பட்ட ஒரு கவிதைத் தொகுதியை பிரசவித்த ஒரு நவீன இளம் படைப்பாளியாக வஸீம் அக்ரம் தன்னை இனம் காட்டியுள்ளார்.

போர்க்காலத்தின் வடுக்களையும் அனுபவங்களையும் படைப்பியல் நுணுக்கத்துடன் வெளிக்கொணரும் போது ம.்.மூத் தர்வீஷ்யையும், அதன் அழகியல் அம்சங்களை கச்சிதமாக வெளிக் கொணரும் போது சேரனையும் அவ்வம்சம்சங்களை மொழிப்புலமை முதிர்ச்சியுடன் வெளிக்கொணர்கையில் வ.ஐ.ச. ஜெயபாலனையும் இவரில் இடையிடையே காணமுடிவது இவர் உள்ளே தெரியும் இவரின் அசுர பலம் என்று சொல்லத்தக்கவை. அச்சம், மண் ஆக்கிரமிப்புக்கொதிரான பச்சாதாபம், அவநம்பிக்கை, ஏமாற்றம், இயலாமை, போரின் மீதான வெறுப்பு, அழுகை, கிளர்தல், ஆக்கிரமிப்பின் கொடூரத்தை குறியீட்டாக்கல், எள்ளல், சுய கழிவிரக்கம், காதல்; காட்சி விவரணம், சமாதானத்தின் மீதான அபரிமிதமான எதிர்பார்க்கை முதலிய அம்சங்களை இத்தொகுதி எங்கணும் நாம் காணமுடியும். முக்கியமாக போரும் அதன் கொடூரமும் அதன் மீதுள்ள அபரமிதமான வெறுப்பும் தொடர்ச்சியான அச்சமும் தனது இயலாமை மீதான பச்சாதாபமும் தார்மீக ஆவேசமும் அமைதியின் மீதான தங்கு தடையில்லாத ஆர்வமும் இவரின் படைப்புகளில் நிரம்பி வழிந்தோடும் பொதுவான அம்சங்களாகும்.

மிக முக்கியமாக பின்வரும் தொடர்களை பல்வேறு தலைப்புக்களில் நாம் அடிக்கோடிட்டுக் காட்டமுடியும்.

"முறுக்குக் கம்பிகளால் காவலிடப்பட்ட
எல்லைகளைத் தாண்டும் சுயம்
மரணத்தின் சுவர்களால் நிர்மாணிக்கப்படுகிறது" *(பயண நிழற்படம்)*

"துயரம் பிதுங்கித் தள்ளும்
எனது கொட்டிலில்
ஒரு புல்லாங்குழல் வாசிக்கும்
எதிரியின் நண்பனாகவும்
அதற்கு பட்டாசு கொழுத்தி மகிழும்
கூலிப் படையாகவும்
இப்போது உனையெதிர்க்கிறேன்" *(நானும் நீங்களும் அவர்களும் ஒரு வெள்ளைப் புறாவின் கூண்டுக்குள் நுழைவோம்)*

"கனவுகள் பூசப்பட்ட
இரவின் அர்த்தங்கள்
முட்கம்பிகளில் சிக்கி
தென்றலின் தலையினையை
தொலைத்துவிட்டு
காலத்தின் எறிகனையில்
பயணிக்கிறது" *(இழந்தவைகள் பற்றி)*

"வழியில் முட்கம்பிகளால்
பின்னப்பட்ட வேலிகள்
அதனருகில்
பயங்கரவாததத்தின் அடையாளங்களுடன்
இருக்கைகளும் இருப்பிடங்களும்
சில மனிதர்களும்" *(ஆக்கிரமிப்பின் கால் தடம்)*

"காற்றின் சோக உணர்வுகள்
மூங்கில் காட்டில் விழுந்து
தீப்பற்றி எரியத்துவங்கின" *(மனித அவலக் குறிப்புகள்)*

மேற்காட்டிய கவிதைகளின் சில வரித்துளிகள் வஸீம் அக்ரமின் கவித்துவத்துக்கும் மொழிப் புலமைக்கும் படைப்பாற்றலுக்கும் அழகியல் லாவண்யத்திற்கும் சிறந்த எடுத்துக் காட்டுக்கள் என எனக்குப்படுகின்றது.

iii

இத்தகு சிறப்பும் அடையாளமும் காட்சிப் படுத்தலும் ஓவியத்தன்மை வாய்ந்ததுமான கவிதைகளை எழுதத் துவங்கியிருக்கும் வஸீம் அக்ரம் எதிர்காலத்தில் பெரிதும் பேசப்படுவார் என்பது எனது திண்ணமான முடிவு. இன்னும் அவரின் ஆற்றல்கள் வேகத்துடன் வெளிப்படவும் அந்த வெளிப்பாட்டின் மூலம் மானுடம் ஓங்கியிருக்கவும் இவரை மனதார வாழ்த்துகிறேன்.

அன்புடன்

**மன்சூர் ஏ காதிர்**
குலிஸ்தான்
அலிவன்னியா வீதி
சம்மாந்துறை - 09

28.09.2009

## உறவுகள் பிரிந்த காலத்தின் அச்சக் கனவு

மிகவும் அண்மிக்க முடியாத
ஒளியற்ற இருளின் நிழல் வெறித்த
துயரத்தின் வியாபகம் பதுங்கியிருக்கும்
ஆதி கால மகிழ்வின் நோக்கங்களை சப்பிய
போரின் நுண் இழைகள் கசிந்த
மண்ணிலிருந்து விடுபட்டுக்கிடக்கிறது
உறவுகள் படர்ந்த எனது வானம்

எனது உறவுகள் தங்கியிருக்கும் வானத்தில்
என் தாகத்தின் கனிச்சுவை
எனது எதிர்பார்ப்பின் உணர்வுகள்
ஊர்ந்து திரிகின்றன

நான் அநாதரவாக தங்கியிருக்கும் மண்ணில்
பலிகொள்ளும் மனிதங்களில்
தப்பித்துப் போன சிற்றுயிரியின் மகிழ்ச்சி
பொற்கால காதலின் சிறகுகளை உய்வித்து
வானத்தில் நட்சத்திரங்களுடன்
மறைந்து வாழ்கிறது

மண் காவலிடப்படுவதும்
அடிக்கடி சட்டப் பிரம்மைகளால் ஏமாற்றப்படுவதும்
பாகுபாட்டின் சிறுமையைக் கொண்டு
நன்மைகளை ஆக்கிரமிப்பதும்
என் மீதான கொலையாகவே நிகழ்கிறது

கால்களில் சங்கிலிக் கட்டுகள் மீதமிருக்குமாயின்
ஆன்மாக்கள் வானத்திலே தங்கியிருப்பது
எவ்வளவு மேலானது?

ஒரு சோகத்தின் அருவியை ஓடவிட்டு
அதன் எதிரியை மரியாதையில் கடிவாளமிட்டுவிட்டு
எங்கள் கிராமங்களில் புறாக்களைப்
பறக்க விடும்போது
சமாதானம் மலரப் போகிறதா?

எனது வீட்டு முற்றத்தில் தின்று வளரும் எருமை
அது என் மார்பின்
அன்புத் திட்டுக்களை தாக்கும் என்ற
அச்சக் கனவின் பார்வை வீச்சில்
உறவுகள் வானத்தில் தங்கிவிட்டன
என்னைத் தவிர

# மனித அவலக்குறிப்புகள்

நதிக்கரையில்
விம்மிக் கிடக்கும் அலைகள்
அமைதி அடங்கி ஓலமிடுகிறன

காற்றின் சோக உணர்வுகள்
மூங்கில் காட்டில் விழுந்து
தீப்பற்றி எரியத்துவங்கின

நாய்களும் நரிகளும் ஊளையிட்டு
அந்தியின் அமைதியை
அவமதித்தன

காகங்கள் கரைந்து
செய்தியை பரிமாற்றிக் கொண்டன

பருந்துகள்
வேட்டைக்குத் தயாராகின

மனிதம் இறந்துகிடக்க
எறும்புகள் ஊர்வலம் நடத்தின

*2008.11.12*

# அழுதுகொள்ளும் ஆன்மா

தேவைகளை மறந்துவிட்டு
இயலாமையை துதித்து
இருப்பைத் தேடி
நகர்கிறது ஆன்மா

பயணங்கள்
யாருமற்ற நிலப்பரப்பின் மீது
மிக வலிமையானவையாக
அல்லது
கடூரமானவையாக
காலத்தின் சாலைகளில்
தொடர்கின்றன

அந்தரத்தின் நிழல்
இரவின் கண்ணீர்
மௌனத்தின் தேய்வு
இன்னும்
உணர்வுகளின் வாஞ்சை
அனைத்தும்
அழுதுகொண்டிருக்கும்
ஒரு புள்ளியில் தங்கிவிடுகின்றது

*2009.03.09*

## ஆக்கிரமிப்பின் கால் தடம்

குரூர இருள்
அடை மழை
இடி மின்னல், புயல்
இன்னும் வார்த்தைகளால்
சொல்லயியலாத
ஓர் அசாதாரண சூழலில்
எனது தங்குமிடத்துக்காக
வீறு நடைபோடுகிறேன்

வழியில் முட்கம்பிகளால்
பின்னப்பட்ட வேலிகள்
அதனருகில்
பயங்கரத்தின் அடையாளங்களுடன்
இருக்கைகளும் இருப்பிடங்களும்
சில மனிதர்களும்

எனது வாசலின்
எல்லைகள் மூடப்பட்டிருந்தன
எனது மண் தெருக்கலில்
எனது கால் தடயங்கள்
புணரப்பட்டிருந்தன

வீட்டின் வேர்கள்
பற்றியிருந்த மண்ணில்
புனித பூமிக்கான சிலை
புதைந்திருப்பதாக
எனது மனைவியும் பிள்ளைகளும்
ஓலமிட்டனர்

# குழந்தை ஓவியம்

ஓர் அழகான புன்னகையின் ஒலியை
சேமித்த தைரியத்தில்
உன் நிழல் வரைபடங்களை
விரல் தூரிகையால் கீறுகிறேன்

காற்றின் நீட்சியில்
உனது மௌனத்தினதும்
கவிதை முனகல்களினதும் பயணம்
எனது கதவுகளைத் திறந்து
வந்து சேர்கின்றது

ஒரு நட்சத்திரத்தின் ஒளியில்
மின்மினிப் பூச்சியாய்
எண்ணில் வட்டமிட்டு
ஒரு கூடத்தையே கட்டிவிட்டாய்

ஒரு கவிதைப் புத்தகம்
ஒரு விஷப் பானம்
இரண்டின் விளிம்புகளிலும்
உனது முகம் தொங்குகிறது

சினேகத்தின் சுவர்களில்
நான் குழந்தையொன்றின்
ஓவியத்தை முத்தமிடுகிறேன்

# மொழி

எனது மொழி அதன் வடிவங்களை
ஒவ்வொரு பொழுதுமான காலையில்
விசாரணை செய்கிறது

அது பல கதையாடல்களில் மட்டுமின்றி
இன்னும் பல கல்வெட்டுக்களில்
இறந்து கிடக்கிறது.

எங்காவது அதன்
தாய் தேடி அலையும் குழந்தையாக
மொழி பிச்சையெடுத்து
அதன் வடிவத்தை நகர்த்துகிறது

கண்களுக்கு காயமேற்றும்
உருக்களும் அணிகலன்களும்
அலங்காரங்களும்
சமைத்துப்போட்டு அதன் தாயை
அநாதையாக்கிவிட்டார்கள்

அதன் படிம வரைபட உரு
இலக்கண வித்தை
இதற்கும் அப்பால் அதன் நியமம்
தொலைந்துவிட்ட அதிசயத்தை
இருத்திக் கொண்டு
மானம் பறிக்கப்பட்ட பெண்மையாக
மொழி பைத்தியப் போதையேற்றி
சுவர்களிலும் விளம்பரப் பதாதைகளிலும்
அலுவலக முன்றலிலும் எழுதப்பட்டுக் கிடக்கிறது

## நிறங்களைக் காழ்பவன்

நிறங்களைப் கலப்பதும்
அதனை அணைத்து முத்தமிடுவதும்
உணவுத் தட்டில்
கொறித்துப் போட்டுப் பிசைந்து
வர்ணக் கூறுகளை வேறாக்கி உலர்த்துவதும்
விளையாட்டாகிவிட்டது

சோர்வுகள் நிறைந்த
நினைவுகள் வந்து
கன்னங்களை விறாண்டுவதும்
தலையை கோதிவிடுவதும்
கை கோர்த்து அசைப்பதும்
மரபாகிவிட்டது

யாரையும் நம்பமுடியாத கணங்களில்
வாசலிலும் கால் துடைக்கும் மட்டையிலும்
குப்பைக் கூடையிலும்
நிரம்பிப் பரவுகிறது
சமாதானம் பற்றிய மொழிகள்

ஆசனத்தில் அமர்ந்து கொண்டு
நகம் கொறித்து
இரத்தத்தை சுவைக்கிறது
போர்ப் பிரகடணம்.

# ஒரு எதிரியின் காவலரன்

கண்ணீர்த் துளிகளின் நடுவில்
வாழ்வின் மெழுகு உருகிக் கரைகிறது
என் சுயம் தடம் மாறிய இடத்தில்...

என்னைப் பொருட்படுத்தாத நிழலில்
மனித நேசம் உடைந்து கிடக்கிறது.

வெப்பம் மிதந்து எரியும் முகாமில்
தீ துளிர்த்துப் பெருகிய காலத்தை
அருந்திக் கொண்டு
உறவின் வெறுமை நிரம்பிய
நாட்களின் வெளி எல்லை
வெதும்பிக் கிடக்கிறது.

ஜடங்களின் அரூபங்களை நிறுவிப் போகும்
நண்பனும் தோழியும்
குப்பையில் கொட்டிய தன் ரகசியங்களை
ஓலமிட்டுப் பாதுகாக்கின்றனர்

தனிமையின் தொலைவுகளில்
குழந்தையின் ஸ்பரிசங்களில்
உதிர்ந்து விழும் பிரியங்கள்
இயல்பு மீளும் இறுதிக் கணம்
நிர்ப்பந்தத்தின் புகைப்படத்தை அல்லது
செய்தியை விசும்புகிறது

இடம் மாறி நிகழ்ந்து கொண்டிருக்கிறது
நிர்ப்பந்தமும் அதன் வசீகர விளம்பரமும்

## எச்சக் கோடு வரைதல்

மௌனம் பூசப்பட்ட
அல்லது நிரப்பப்பட்ட
வெள்ளைத் தாளில்
உனக்கும் எனக்குமான
ஓவியப் பாதை வரையப்படுகிறது

அந்த வெள்ளைத் தாள் முழுவதும்
நாம் நேசிக்கும்
கவிதைகள் ஒழிந்துகிடக்கின்றன

அங்கே
மனித உருவங்கள் கிடையாது

நீயும் நானும் தனிமை

காதல் மொழிகள்
சிதறுண்டு கிடக்கின்றன
அதனைப் பொறுக்கியெடுத்து
பாடலாக்குவதும் இசைப்பதும்
நமது பணியாகத் தொடர்கிறது

இன்னும்
நமது உணர்வுகள் குரல் எழுப்புவதும்
விரல்கள் போரிடுவதும்
இவற்றுடன் மூச்சுத்திணிவுகள்
குளிர் காய்வதும்
நேர்ந்துவிடுகிறது

நீயும் நானும்
உணர முடியாமல்
வெற்றுப் பக்கங்களில்
நிறம் மாறிக்கிடக்கிறோம்

நமது உறவு
இடைவெளி பிழந்து
அச்சக் கோடுகளுடன்
சிவப்பாயத் துளிர்விடுகிறது

*2009.03.30*

# பூட்டப்பட்ட அறைகள்

நம்பிக்கையிறந்து கிடக்கிறது
வீதியில் நடமாடித்திரியும் மனசு

மரணங்கள் வசிக்கின்ற வெளிகளில்
சுதந்திரமாக நடக்க முடிவதில்லை

விபத்துக்களின்போது
பீதியின் உருவங்களைப் பார்த்து
விழிகள் ஜனித்துவிட்டன
பனிமூட்டம் படர்ந்த
விடிகாலைப்பொழுதையும்
நட்சத்திரக் குமிழ்கள் பொருத்திய
இரவின் மௌனங்களையும்
துருப்பிடித்த ஜன்னல் கம்பிகளே
தரிசிக்கின்றன

கறுப்பு நிற புகைமூட்டம்
கூரையின் முதுகில் படிந்து
வர்ணங்களால் நிறப்பவேண்டிய
புன்னகையை பரிட்சிக்கிறது

கடூர சாவிகளால்
கதவுகள் பூட்டப்பட்டுள்ளன
காற்றுப் புகமுடியாத சுவர்களுக்குள்
இருளின் விருட்ச வலியினை
என் வசிப்பிடத்தில்
எப்போதுதான் மாற்றமுடியும் ?

## எதிர்பார்ப்புகள் எரிக்கப்படுவது பற்றி ...

முடிவில்லா இழைகளில்
விசாரணை முடிந்துகிடக்க
அகிம்சை கலந்த
ஓர்மம் சிறகடிக்கும்

வெறி உமிழும் விழிகள்
எங்கள் வாழ்தலில்
ஒரு கோடி யுகமாய்
துவம்சம் செய்யும்

புதிய கிரகங்கள் புலர
இராட்சச உடுக்களின்
பிரவேசம் நிகழ
அழகான எதிர்பார்ப்புகளின்
தணிக்கை நிகழும்
ஏற்றத் தாழ்வின் எல்லைகள்
புயலாய் வீசிக் கிளர
போதாமையின் புற்றில்
ஊர்ந்து திரியும் கனா...

மரணத்தின் பிம்பங்களை
கோர்த்து அணிவிக்கும்
உங்கள் வேட்கையின்
அபார விடுவிப்புக்கள்
எங்களையும் எரித்து
சாம்பலாக சேமிக்கும் வரை
துரத்தித் துரத்தி தேடும்
எந்த வித நியாயங்களுமின்றி

# அவாவுதல்

வாழ்வின் அகராதியின் வழியே
என் இரு விழிகள் நுழைந்து
உன் பெயரணுக்களை பரிசோதனை செய்வது
ஒரு நிதர்சனத்தின் கனவு முடிப்பை
பிந்தியேனும் திறப்பதற்கே

நீ பவ்வியமான நெகிழ்வில்
என் மன அமைதியின்
வனாந்திரப் பரப்பிலிருந்து
யுத்தத்திற்கு நிகரான ஒரு
அசாதாரண நிலவரத்தை தோற்றுவித்து
மறைய முனைகிறாய்

அதற்கு என் மன விளிம்புகள்
போராட்டமும் பகிஸ்கரிப்பும் செய்து
மங்கிய மாலைப் பொழுதாக
வாழ்வை முரண்படுத்துகிறது

என் கடைசி நேர
அவாவுதல்களின் வார்த்தைச் சிற்பி
உன் பெயரை எங்காவது ஒரு கல்வெட்டில்
பதிவு செய்த பிற்பாடே
என் காவிய விழிகளை மரணிக்கச் செய்யும்

என் நம்பிக்கை கடல்
சுனாமிப் பேரலையாக
உனது ஊரை வியாபித்து
என் வாழ்வின் அவலங்களையும்
சுமைகளையும்
எப்போதாவது அறைந்துவிட்டுப் போகும்

# சுதேச உரிமையைத் தொலைத்தல்

நான் நடக்கும் துவாரங்களின் நடுவில்
கடிந்து கொள்ளும்
சூரியக் கதிர்களின் ஊடுருவலில்
மணற்றிடலில் புழுவாக ஓலமிடுகிறேன்

இன்பச் சாயலை
இரசனையை
உறிஞ்சிக்குடிக்கும் வெறியில்
சூரியப் பெரு நாய் நகர்கிறது

மின் தொடுக்கப்பட்ட முட்கம்பி இழைகளும்
விஷமேற்றிய கண்ணாடித்துண்டுகளும்
அகோரப் பசியை அணைத்துக் கொண்டு
தணல் நதியின் பெருக்கத்தில்
எனது புற்றின் துவார வெளிகளை
அடைந்துகொள்கின்றன

வெறியின் கண்சுளைகள் நித்தமும்
பிதுங்கித் தெரியும் வீரமும்
அதிகாரம் தொடுத்த வில்லின் வரைபடமும்
குடை போல் விரித்த எனது
மரங்களின் நிழற் பரப்பில்
போர்ப் பயிற்சி செய்கிறது

இடையில் நின்று நான்
அச்சத்தின் விரிப்பில்
பெற்றுக் கொள்ள முடியாத சுதேச உரிமையை
அடையாளம் தெரியாத பிணச்சந்நிதானத்தில்
அஸ்தமனம் வரை தொலைத்திருப்பேன்

## தாவுகை

ஒரு நிலவின் கண்கள் முழுவதும்
விழித்துக் கிடக்கின்றன
உணர்வுப் பூச்சி மொய்க்கின்ற
அந்தரங்கங்களில்
மௌனத்தின் தடயம்
பூத்து ஒளிர்ந்து கிடக்கிறது
காற்றின் ரகசிய மொழிகள்
அறைக்குள் நின்று நிழலாடி
கவிதையின் படிமம் பிசகாமல்
நனைத்து
உடல் வெளிகளில்
குளிரின் விசிறிகளை திறந்து
உலரவிட்டு
ரேகைகள் ஒத்திகை பார்க்கின்றன

# மீசான் கட்டடைப் பயணம்

விழிகள் பேசும் இரவுகளில்
சுவர்ச்சித்திரமாய்
ஒட்டிக்கிடக்கும்
ஞாபக எச்சங்களில்
நான் துழாவித்திரியும்
கோரிக்கைகளின்
நியாயங்களின் வரைபடம்...

எனது அகால மரணத்தின் பின்
மீசான் கட்டைகளின் இடுக்கில்
நடப்பட்ட மரக்கிளையில்
தடயமாக
நிச்சயம்
நெருக்கப்பட்ட எனது மண்ணின்
கண்ணீர் துளிகள்
ஊற்றெடுக்கும்

## இழந்தவைகள் பற்றி

நிலவுத் தட்டில்
உறங்கியிருந்தேன்

நட்சத்திரக் கனவுகள்
ஓவியப் பூமழை தெளித்தன

நிஜங்களின் வலிகள்
வானங்களில் கூடுகட்டி
மேகங்களில் தாவிச் செல்கின்றன.

மௌனத்தின் மொழியினை
காற்று பாடலாக்கி
மூச்சு வாடையில்
துயரப் புல்லாங்குழல்
இசை மீட்டுகிறது

கனவுகள் பூசப்பட்ட
இரவின் அர்த்தங்கள்
முட்கம்பிகளில் சிக்கி
தென்றலின் தலையணையை
தொலைத்துவிட்டு
காலத்தின் எறிகனையில்
பயணிக்கிறது

முகில்களாக
மாறிவிட்ட நம்பிக்கையில்
காற்று புயலாக வீசி
என்னை விட்டு தூரச் செல்கிறது

நான் வானம்பாடியாக
இடம் தேடி அலைகிறேன்
எனது கனவுகளையும் கவிதைகளையும்
கருத்தரிக்க...

# துயர் கலந்த வெளி

தொலைந்துபோன
இன்பத்தின் வர்ணிப்பை
பிந்திப் போன
காலம் தேற்றுகிறது

சொந்த மண்ணின் கனவை
நட்சத்திரங்களின் அலங்காரங்களை
பேசவேண்டிய வார்த்தைகளின் தவிப்பை
ஈரம் கசிந்த மனஓர்மம் புசிக்கிறது
மணல் முகட்டில்
கூறை பின்னி
உப்புக்கரிக்கும் பட்டினியில்
பொழுதைச் சுருட்டி
விடியலின் விதி மூடப்பட்டிருக்கிறது

ஏமாற்றப்பட்ட வரலாற்றின் குரல்
கொட்டை எழுத்துக்களில்
துயரக் கதைகளுடன்
பத்திரிகையில் பிரசுரமாயின

விஷம் சேர்ந்து
நரைத்தது வயது

சிறு புள்ளியும் மாறாது
வெட்டி மறைக்கப்பட்டு
மேலும் கரைந்தது
பூர்வீகப் பயணம்

# மண் தின்னும் மனசு

மீளமுடியாத இரவின் புதர்களில்
புதைந்துபோயுள்ளது
அர்த்தமற்ற கனவின்
ரேகைப் புள்ளிகள்

நம்பிக்கைக்கு உரித்தான நிலத்தில்
மனம்விட்டு எழுதிய ஓவியம்
சிதலமறுந்து
இடம்விட்டுப் போகிறது

அசுர வடிவங்கள் தோன்றுகின்றன
நிர்மாணிப்பது
யார் என்பது புதிராக
இருப்பினும் என்ன
அச்சத்தின் நிழல்
பரிமாணம் அடைகிறது

தீச்சுவாலை விசிறிய
இருத்தல் பற்றிய குறியீடுகளில்
கோடை மேகங்கள்
தனிமையில் புலங்கின

ஓவியப் பறவைகள்
பூக்களின் மலர்ச்சியில்
சாறு பொழிந்து
மண் வாசனையை முகர்ந்தன
ஆனால்
வாழ்வின் இருளோடு
பேய்க்காற்று ஊசலாட
என் நிலம் தாழிடப்பட
அச்சக் கோடுகளால் நிந்திக்கிறது

நான் எதையும் அறியாதவனாயிருக்க
நான் எப்படி ஊருக்குள் இருப்பது...?

*2008.11.19*

# ஞாபங்களில் சோம்பல் முறித்தேன்

வெண்மை துழாவிய மனதில்
காடாய் முளைத்த ஞாபகங்களில்
வருடிய அக்கினிச்சிறகுகளின்
வர்ணங்களில் வதைபட்டுக்குலைந்தேன்

எனக்கெதிரே முரண்கள்
முளைத்தன
அமைதியின் அத்திவாரம்
சூரியனின் தோலில் பூட்டப்பட்டது

சலனமின்றி விழித்தேன்
நேசங்கள் அனைத்தும்
சோகங்களாய் மாறின
காற்று காலங்கடந்து
நனவுகளில் வீசியது
சந்தோசங்களில் மட்டும்
அதிஷ்டம் விபத்துக்குள்ளானது

என் பழைய உணர்வுகள்
சாக்கடைக்குள்
பொசுங்கிக் கிடக்கின்றன

என்னை மீட்பதற்கான குரல்
உடைந்துவிட்டது

எனது திராணி
அவநம்பிக்கையிலே
காலங்கடத்துகிறது
தோல்வியே பிரியம் கொள்கிறது

# விலங்கிடப்பட்ட வாழ்வும்
# விடுவிக்கப்படாத வார்த்தைகளும்

ஒளிச் சாளரங்கள் தெரியாத
இருள் வெளியில்
கால் தட(ய)ங்கள்
நகர்ந்து திரிகின்றன.

பீதியின் நிற மூர்த்தங்கள்
வீங்கிப் புடைத்த
உடற் கொப்புளங்களில்
கண்ணீர்த் துளிகள்
உப்புக் கரிக்கின்றன

கவிதைகள் பாடித்திரிந்த
கனாக்காலச் சிறகுகளை
கோதிக் கோர்த்து
விலங்கிட்டாயிற்று

பிரபஞ்சம் சுயமிழந்து
நான்கு சுவர் எல்லைகளுக்குள்
அடைகாக்கப்படுகின்றது

விழிகள் இறந்த வழியில்
சூரிய அமாவாசையின்
சூன்ய விம்பங்களை முகர்ந்து
மலத்தை மென்று கொள்கிறது
பசியின் நீண்ட விகார உருவம்

மலட்டுக் குரல்களும்
மலிவான ஓவியங்களும்
பெண்மையைத் தாலாட்ட
தாய்மை புலர்கிறது
யாருமில்லாத வதை முகாமில்

# பயண நிழற் படம்

அன்பின் விருட்ஷ நிலமெங்கும்
நெருப்புத் தணல் ஊறும்
கடூரங்களைக் காண்கிறேன்

ஆடை தூறல் தூறலாய்க் கிழிந்து
குருதி வழியும் சாலையை
ரணத் தழும்புகளுடன்
பாதங்கள் இடம் தாவின

ஒழுக்குத் துவாரம் நிரம்பிய கூரையில்
வானம் நீச்சலிடும்
காற்று நூல் இழைக்கும்
துயரம் மௌனம் முரசும்

காடு படர்ந்த யாருமில்லாத் தார் வீதியில்
கொலையாளி முத்தமிடுவதும்
நயங்களைச் செருகி
துப்பாக்கிகளைத் துடைப்பதும் நிகழ்கிறது

முறுக்குக் கம்பிகளால் காவலிடப்பட்ட
எல்லைகளைத் தாண்டும் சுயம்
மரணத்தின் சுவர்களால் நிர்மாணிக்கப்படுகிறது

குழந்தைகள் விளையாடும்
புழுதி பூத்த தரைகளில்
இறந்தவனின் சிதில ரேகைகளை
அள்ளியெடுத்து கொறித்துப் பார்க்கிறது மனசு

## நானும் நீங்களும் அவர்களும்
## ஒரு வெள்ளைப் புறாவின்
## கூண்டுக்குள் நுழைவோம்

ஒரு ஆக்கிரமிக்கப்பட்ட நிலப் பரப்பில்
காய்ந்துலர்ந்த மனிதர்களின்
துயரக் கடல் வற்றாமல் நீள்கிறது

இயல்பறுந்த வாழ்வில்
உணர்வின் காயங்கள் மீள் நிரப்பும்
அல்லது மருந்தூற்றும் பணிகளில்
பிரக்ஞை கலந்த கால வெளி புலர்ந்து கிடக்கிறது

நேற்றைய கண்ணீர்ப் பூக்கள்
முற்றத்து பூச்செடியில்
அதன் சாயலைக் காட்டும்
காலத்தின்
பாறைக் கல்லறைகளில்
கனவு கவிந்த எதிர்பார்க்கை தொடர்கிறது

நான் உரிமையின் மயிரிழையைக் கூட
கண்டிராத ஒரு அகால வாழ்வில்
தணியாத பேரவலத்தைச் சுமந்து இங்கு
அடைக்கப்பட்ட எல்லைகளில்
துயர நொடிகளைக் கடத்துகிறேன்

மனசு நொண்டிச் சக்கரத்தில்
காலனித்துவ ஆட்சியில் அலம்பித்
தூர்வாடையில் துளிர்கிறது

எனது சுயத்தின் விசாலம்
ஒரு யுகத்தின் காட்சியைக் காட்டும்
எனது மனப் புழுக்கத்தின் பரப்பு
இந்த தேசத்தின் சூரியச் சுவாலையை கொட்டும்

நான் நானாகும் பணி
நாளையென்ற உங்கள் கழிவறையில்
குழைந்து கிடக்கிறது
அதன் நியாயக் கோரிக்கை
அஸ்தமனப் புள்ளியில் சயனித்திருக்கிறது

எனக்கான வாழ்வு
எனது சொந்தங்களின் மகிழ்ச்சி
உங்கள் ஆக்கிரமிப்புப் படைகளின்
காலடி மண்ணில்
எறும்பின் தேடலாக தொடர்கிறது

துயரம் பிதுங்கித் தள்ளும்
எனது கொட்டிலில்
ஒரு புல்லாங்குழல் வாசிக்கும்
எதிரியின் நண்பனாகவும்
அதற்கு பட்டாசு கொழுத்தி மகிழும்
கூலிப் படையாகவும்
உங்கள் பிம்பங்களிருப்பதேன்?

நான் எதிர்கொள்ளும் சவால்
நீ எனக்கு ஊற்றும் கஞ்சியில் கரைந்த
ஒரு துளி விஷத்தின் பரிணாமத்தில்
ஊறிக் கிடக்கிறது

இந்த அவநம்பிக்கையின் நீட்சி
தற்கொலை செய்துகொள்ள
நீங்கள் இடப்போகின்ற தீர்வுப் புள்ளிகளுக்கே
காத்துக்கிடக்கின்றன

நான் எனது தவறை இறஞ்சி
எனது நண்பனின் தொழுகைப் பிரார்த்தனையில்
மண்டியிட்டுக்கொள்கிறேன்.
இனி நான் எந்த உயிரியின் மரணத்திலும்
அவர்கள் மீதான இனத்துவ வேட்டையிலும்
நான் என்ற அகங்கார முகிழ்வை புனையமாட்டேன்

நீங்களும் நானும் அவர்களும்
ஒருவரை ஒருவர் அஞ்சி வாழும்
அநாதை அரசியலுக்கு மட்டுமே
நமது ஒட்டு மொத்த எதிர்ப்பை
புலப்படுத்துவோம்

எனது தேவை
சினேகத்தின் அல்லது அன்பின்
ஒரு பிடி மண் சோறு மட்டுமே
அது எனக்கான மண்ணறையின்
தொடுபுள்ளியாகவோ அல்லது
மகிழ்வின் பிரசவமாகவோ இருக்கலாம்
அது உங்கள் ஆத்மார்த்தத்தின்
நம்பிக்கை அணுக்களால் வேயப்பட்டதாக இருக்கட்டும்

நமது தேச அலங்கோலங்களைக்
காலாவதியாக்கும்
கடைசித் தருணம் உங்கள்
படுக்கையறைகளின் அலங்கார விரிப்புகளில்
ஒரு துண்டுத் துணியாக இருக்கிறது
நீங்கள் நோண்டியெடுத்து அதை எமது
நிர்வாணப் பகுதிகளுக்கு ஆடையாக அணிவியுங்கள்

நான் மட்டுமல்ல
நீங்களும் அவர்களுமே இந்த நியாயத் தேவையின்
தடங்களையே தழுவியுள்ளோம்.
இது உங்களினதும் எங்களினதும்
வரலாற்று வியாபாரத்தின் கடுரங்களே

இனி புகை மண்டலம் செறிந்த
நமது வரலாற்றைத் தூய்மை செய்து
காயப்பட்ட நமது உணர்வுகளை
ஆற்றுப் படுத்தும் பணியை நிறைவேற்ற...
நானும் நீங்களும் அவர்களும்
ஒரு வெள்ளைப் புறாவின் கூண்டுக்குள்
சமாதான சோலையில்
குடித்தனம் நடத்துவோம் ...



நாம் கடந்த காலங்களில்
நமது சூழலில் எதிர் கொண்ட சவால்கள் அதிகம்.
நமது நாளாந்தத் தேவைகளையும் உரிமைகளையும்
அடைந்து கொள்வதில் கூட
பல்வேறு போராட்டங்களைச் சந்திக்க நேரிட்டுள்ளது.

இவ்வாறான காலகட்டங்களில்
நமது உணர்வுகள் காயப்படாமல்
சாந்தமிக்கதாக ஆற்றுப்படுத்தும் பணியை
அடிக்கடி இழந்து விடுவதுண்டு.

நமது வாழ்வில் எதிர்கொள்கின்ற கடூரங்களிலிருந்து
நம்மைத் தூய்மைப்படுத்தும்
ஒரு இயல்பையே
நான் வேண்டுகிறேன்.

- எஸ். வஸீம் அக்ரம்